00104

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்

மட்டம் - 05

**LLU5709–** நிர்வாகச் சட்டம்

இறுதிப்பரீட்சை - 2023/2024

காலம் : மூன்று (03) மணித்தியாலம்

திகதி : 23.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08
ஐந்து (05) வினாக்களிற்கு விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. 2020ஆம் ஆண்டின் புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திக்கான சட்டம் ஆனது நாட்டில் சூரிய சக்தி பாவனைக்கான மேம்பாடுகளுக்கும் ஒழுங்கமைப்பிற்குமான விதிகளை ஏற்படுத்துவதற்கு வலுசக்தி அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்தச்சட்டத்தின் பிரிவு 30இன் கீழ் அரசின் மின்சார ஒழுங்கு சபைக்கு வரிக்கட்டணத்தை நிர்ணயித்தல் முதலான மட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளை கையளிக்க அமைச்சருக்கு அதிகாரம் அளித்துள்ளது. 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 02ஆம் திகதி பிரிவு 30இன் கீழ் அரசின் மின்சார ஒழுங்கு சபைக்கு சூரிய சக்தி அலகுகளுக்கான வரிக்கட்டணத்தை மாற்றவும் சூரிய சக்தி தனியார் கம்பனிகளுக்கான மானியத்தை நிறுத்தி வைக்கவும் பொது அக்கறைத் தேவைக்கு ஏற்ப விதி ஒன்றை அமைச்சர் ஏற்படுத்தினார். பிரிவு 35 ஆனது அரசின் மின்சார ஒழுங்கு சபை புதிய கட்டணங்கள் நடைமுறைப்படுத்தப்பட முன்னர் சூரிய வலுச்சக்தி உற்பத்திக் கம்பனிகளுக்கு இரு மாதங்களுக்கு முன்னர் தகவல் அறிவிக்கவும், விசாரணை ஒன்றிற்கும் தேவைப்படுத்துகிறது. இச்சட்டத்தின் பிரிவு 40 ஆனது "இச்சட்டத்தின் கீழ் ஒரு ஒழுங்குச்சபையால் ஏற்படுத்தப்பட்ட எந்தக் கட்டளையும் ஏதேனும் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்படலாகாது" என்றுரைக்கிறது. அரசின் மின்சார ஒழுங்கு சபையானது 2025ஆம் ஆண்டில் ஏப்ரல் 10ஆம் திகதியில் இருந்து உடனடியாக செயற்படுத்தப்படும் வண்ணம் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது.

   (அ) அரசிற்குள்ள அதிகரித்த விநியோகம் மற்றும் பொருளாதார சுமை முதலான காரணங்களிற்காக சகல தனியார் சூரிய வலுச்சக்தி உற்பத்தியாளர்கள் மீதும் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுமாறு மின்சார அலகு ஒன்றின் கொள்வனவு விலை ரூபா 35 இலிருந்து ரூபா 12 ஆகக் குறைக்கப்படுமென கட்டளை ஒன்றை ஏற்படுத்தியது.

   (ஆ) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அதே காரணத்தின் மீது ஐந்து பிரதான சூரிய வலுச்சக்தி கம்பனிகளுடன் நடைமுறையில் உள்ள சூரிய வலுச்சக்தி கொள்வனவு ஒப்பந்தங்களை இரத்து செய்தது.

இகோ எனெர்ஜி பிரைவெட் லிமிட்டட் (Eco Energy Pvt. Ltd) என்பது அரசின் மின்சார ஒழுங்கு சபையுடன் 10 வருட கால குறித்த கட்டணத்திற்கு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டிருந்த பிரதான கம்பனிகளுள் ஒன்றாகும். அரசின் மின்சார ஒழுங்கு சபையினுடைய தீர்மானங்களை கேள்விக்குட்படுத்த இவர்கள் விரும்புகின்றனர்.

இகோ எனெர்ஜி பிரைவெட் லிமிட்டட் (Eco Energy Pvt. Ltd) இற்கு அறிவுறுத்துக.

உமது விடையை வழக்கு உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

(**20** புள்ளிகள்)

2. கிறீன் பார்க் (Green Park) பகுதியில் வசித்து வந்த குடியிருப்புவாசிகளின் குழுவொன்று சேய்ரா நகரசபை தமது பகுதியின் பொதுக்காணியின் ஒரு இடத்தில் கழிவகற்றும் நிலையமொன்றை நிர்மாணிப்பதன் மூலம் அப்பகுதியை பாதுகாப்பற்றதாகவும் ஆரோக்கியமற்றதாகவும் ஆக்குவதாக முறையிட்டனர். மேலும் சேய்ரா நகரசபையானது அருகிலிருந்த பொது காணியொன்றை வாகன தரிப்பிட நிலையமாகவும், குப்பை வண்டிகள், இழுவை இயந்திரங்கள், நீர் தாங்கிகள், அள்ளு வாளிகள் முதலானவற்றுக்கான திருத்த சேவை நிலையமாகவும் இதனை பாவிப்பதாக அவர்கள் முறையிட்டனர். இந்த வாகனங்கள் அப்பகுதியில் நீண்டகாலம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து வெளிவந்த கழிவுகள் சகிக்க இயலாத நுர்நாற்றத்தையும், சத்தத்தையும் ஏற்படுத்தியது. குடியிருப்புவாசிகள் சேய்ரா நகர சபைக்கு காணியை சரியாக பராமரிக்குமாறும் வாகனங்களை வேறு இடத்திற்கு மாற்றுமாறும் ஆரோக்கிய தராதரங்களை பின்பற்றுமாறும் வேண்டி முறைப்பாடுகளை மேற்கொண்டனர். எவ்வாறாயினும் இன்று வரை இக்குடியிருப்புவாசிகள் எவ்வித பதிலையும் பெறவில்லை. சகல முயற்சிகளையும் முயன்ற பின்னர் குடியிருப்புவாசிகள் வழக்கு ஒன்றை முன்வைக்க திட்டமிடுகின்றனர். குடியிருப்பு வாசிகளுக்கு பின்வருவன மீது அறிவுறுத்துக.

(அ) அவர்களுக்கு கிடைக்கத்தகு நிவாரணமும் அந்நிவாரணத்தை பெறுவதற்கு நீதிமன்றில் திருப்திப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகளும்

(12 புள்ளிகள்)

(ஆ) மேலே ஆராயப்பட்ட நிவாரணத்தை நாடுவதில் குடியிருப்பு வாசிகள் முகங்கொடுக்கக்கூடிய சாத்தியமுள்ள சவால்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)

3. சூழல் முகாமைத்துவச் சட்டம் ஆனது சூழல் ஒழுங்கு சபைக்கு சுற்றாடல் தரநிலைகளை பின்பற்றுதல் தொடர்பில் மேற்பார்வை செய்யவும் சுற்றாடலுக்கும் மனித ஆரோக்கியத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் தொழிற்சாலைகளின் அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்யவும் அதிகாரமளித்துள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 4 ஆனது இரண்டு வாரங்களுக்குள் ஒரு பொது விசாரணையை மேற்கொள்ளவும் அத்தகு இரத்து செய்தலுக்கு முன்னர் ஒரு அறிவிப்பை விடுக்கவும் தேவைப்படுத்துகிறது. பிரிவு 10 இன் பிரகாரம் வழக்காடலுக்கும் பொருளாதார நட்டஈட்டை நடைமுறைப்படுத்துவதற்குமான தேசிய சுற்றாடல் நியாயசபை சட்டத்தின் கீழ் நியதிச்சட்ட நியாயசபைகளுக்கு முறையீடுகளை முன்வைப்பதற்கு சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் ஒழுங்கு சபையானது அண்மையில் OIS பவர் கம்பனி எனும் பெரிய மின்கலன் தயாரிப்புக் கம்பனியின் அனுமதிப்பத்திரத்தை உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் மீளப் பெற்றது. சுற்றாடல் ஒழுங்கு சபையானது, அதனால் வழங்கப்பட்ட முன்னறிவித்தல்களை பின்பற்றாது ஆபத்தான கழிவுகளை அருகிலுள்ள ஓடைக்குள் கம்பனியானது அகற்றுவதாக குறிப்பிட்டது. மேலும் சுற்றாடல் ஒழுங்கு சபையானது OIS பவர் கம்பனியை பாதிக்கப்பட்ட கிராமவாசிகளுக்கு 10 மில்லியன் ரூபாவை செலுத்துமாறும் கட்டளையிட்டது.

(அ) மேலுள்ள சந்தர்ப்பத்தின் சட்ட விளைவுகளை ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) OIS பவர் கம்பனிக்கான தகுந்த சட்ட நிவாரணம் குறித்து அறிவுறுத்துக.

(08 புள்ளிகள்)

4. வைத்தியர் பெரோ எனும் அரச மருத்துவ அதிகாரி ஒருவர் மருத்துவ கவனயீனம் ஒன்றை இழைத்ததாக குற்றம் சாட்டப்பட்டு ரசினோவின் சுகாதார அமைச்சால் பணி நீக்கம் செய்யப்பட்டார். இவர் QS எனும் தனியார் வைத்தியசாலையின் பிரதான வைத்திய ஆலோசகர் ஆவார். இவர் விசாரணை ஒன்றிற்காக அழைக்கப்பட்டதுடன் அவ்விசாரணையின் தலைவர் வைத்தியர் தபு என தெரிவிக்கப்பட்டது. QS தனியார் வைத்தியசாலையின் நேரடி போட்டியாளர் ஒன்றான பேட்டா எனும் தனியார் வைத்தியசாலையின் தலைவரே வைத்தியர் தபு ஆவார். இந்த விசாரணைக்குழுவானது ஒரு உள் அறிக்கையில் தங்கியிருந்ததுடன், அதன் நகல் ஒன்றை வைத்தியர் பெரோவிற்கு வழங்கவில்லை. வைத்தியர் பேரோவிற்கு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்வதற்கான அனுமதி கிடைக்காததுடன், இவருக்கான சட்டப் பிரதிநிதித்துவமும் ஏற்கப்படாததுடன் பணி நீக்கத்திற்கான காரணங்களும் வழங்கப்படவில்லை.

(அ) மேலுள்ள சந்தர்ப்பத்தில் இயற்கைச்சட்ட விதிகள் மீறப்பட்டுள்ளனவா என ஆராய்க. உமது விடையை வழக்கு உதாரணங்களுடன் ஆதாரப்படுத்துக.

(10 புள்ளிகள்)

(ஆ) வைத்தியர் பெரோவிற்கு கிடைக்கத்தகு சட்டநிவாரணம் ஏதும் இருப்பின் அவை எவை? பொருத்தமான தீர்ப்புச்சட்டங்களை எடுத்துக்காட்டி ஆராய்க.

(04 புள்ளிகள்)

(இ) 'நீதியானது நிலைநாட்டப்படவேண்டியது மாத்திரமல்ல வழக்கிடும் பொதுமக்களிற்கு அது நிலைநாட்டப்பட்டதாக தோன்றப்பட வேண்டும்.' இக்கூற்றின் மீது பாரபட்சம் குறித்த பரீட்சைகள் எவ்வாறு தொடர்புறுகின்றன என ஆராய்க.

(06 புள்ளிகள்)

5. பாலியின் கடற்கரையோர பாதுகாப்பு மற்றும் மீன் உற்பத்திகள் அபிவிருத்தி என்பனவற்றுக்கான அமைச்சர் பின்வரும் வழிகாட்டிகளை ஏற்படுத்தியுள்ளார்.

(அ) ஆழ்கடலுள் சகல டீசல் படகுகளினது பாவனையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம் தடை செய்தல். இச்சட்டமானது தொடர்புடைய பங்குதாரர்களுடனான ஆலோசனையின் பின்னர் கழிவு வெளியகற்றலுக்கான நிலைகளை அத்தகு ஏதேனும் முன்மொழியப்பட்ட மாற்றங்களை 30 நாட்கள் முன்னறிவித்தலுக்கு பின்னர் "ஒழுங்குபடுத்தவும்" மாத்திரம் அமைச்சருக்கு அதிகாரம் அளிக்கிறது.

(ஆ) குற்றம் சாட்டப்பட்டுள்ள சுகாதார ஆரோக்கிய மீறல்களுக்கு ஏதேனும் அறிவித்தல் வழங்காது கடலுணவு உற்பத்தி கம்பனி ஒன்றின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்தல். இச்சட்டமானது காரண அறிவித்தல் ஒன்றை வழங்கவும், அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்ய முன்னர் பதிலளிக்க இரண்டு வாரகால அவகாசத்தை வழங்கவும் அமைச்சரைத் தேவைப்படுத்துகிறது.

பின்வருவனவற்றை கருத்திற் கொள்வதன் மூலம் மேலுள்ள ஒழுங்கு விதிகள் நீதியியல் மீளாய்வில் இருந்து விடுபட முடியுமா என ஆராய்க.

i. இச்சட்டத்தின் பிரிவு 25 ஆனது "இச்சட்டத்தின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஏதேனும் தீர்மானத்தை கேள்விக்கு உட்படுத்த எந்த நீதிமன்றத்திற்கும் நியாயதிக்கம் இல்லை." என்றுரைக்கிறது.

ii. பாலி நாட்டின் சட்ட உறுப்புரைகள் இலங்கையின் 29ஆம் இலக்க 1974ஆம் ஆண்டின் பொருட்கோடல் (திருத்த) சட்டத்தை ஒத்தது

(20 புள்ளிகள்)

6. றொமேஸ் என்பவன் கட்டுநாயக்க விமானநிலையத்தில் பணிபுரியும் ஒரு அதிகாரி ஆவார். 2025 மார்ச் 15 அன்று அவர் கடமையில் இருக்கும் போது பயணி ஒருவர் தங்க நாணயங்களை கடத்துவதற்கு முயன்றார் என்ற சந்தேகத்தின் கீழ் தேடுதல் விசாரணை ஒன்றை ஆரம்பித்தார். பிற சில அதிகாரிகளின் உதவியுடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டதுடன் தங்க நாணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சம்பவம் நடைபெற்று ஒரு வார காலத்தின் பின்னர் சுங்கத்திணைக்களத்தின் ஒழுங்கு விதி 400இன் கீழ் வெகுமதி ஒன்றை றொமேஸ் வேண்டினார். அது தேடுதல் செயன்முறைகளில் ஈடுபட்ட தலைமை அதிகாரி அத்தகு தேடுதல்களுக்கு வெகுமதியைப் பெற உரித்துடையவர் என்றுரைக்கிறது. சட்டத்திற்கமைய 'தலைமை அதிகாரி' என்பது "சுங்கத்தின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி ஒருவர் சுங்க ஒழுங்கு விதிகள் தொடர்பான விசாரணை ஒன்றை ஆரம்பிக்க அல்லது மீறலொன்றை இனங்காண முதன்மையானவர்" என்றுரைக்கிறது. இவ் ஒழுங்குவிதி மேலும் தெரிவிப்பதானது ஏதேனும் பிணக்குகளின் போது சுங்கத்திணைக்களத்தின் ஆலோசனையுடன் சுங்க தலைமை ஆணையாளர் அவற்றை தீர்க்க வேண்டும் என்பதாகும்.

கனிஸ்க எனும் இச்சம்பவத்தில் ஈடுபட்ட மற்றுமொரு அதிகாரி ஒழுங்கு விதிக்கமைய உண்மையான தலைமை அதிகாரி றொமேஸ் அல்ல தானே என்றுரைத்து வெகுமதியைக் கோருகிறார். சுங்க தலைமை ஆணையாளர் கனிஸ்கவே தலைமை அதிகாரி என கருதி வெகுமதியை வழங்க தீர்மானித்தார். றொமேஸ் இத்தீர்மானம் நியாயமற்றது, நீதியற்றது, ஒருதலைபட்சமானது என

வாதிட்டு வழக்கொன்றின் மூலம் கேள்விக்குட்படுத்தினார். சுங்கத்திணைக்களமானது தலைமை ஆணையாளரின் தீர்மானம் ஆனது அவரது முழுமையான தற்றுணிபின் செயற்பாடு என்றும் அது எவ்வித நீதிமன்றத்தாலும் கேள்விக்குட்படுத்த முடியாது என்றும் வாதிட்டது.

அ. இவ்வழக்கின் நீதிபதி நீர் எனக் கருதுக. நிர்வாகச்சட்டத்தின் விதிகளை எடுத்துரைத்து றொமேஸிற்கு பொருத்தமான நிவாரணத்தை உள்ளடக்கி தீர்ப்பு ஒன்றை எழுதுக.

(12 புள்ளிகள்)

ஆ. "சட்டவாட்சியானது தற்றுணிபு சட்ட எல்லைகளுக்குள் செயற்படுத்தப்பட வேண்டுமென தேவைப்படுத்துகிறது." இக்கூற்றை நிர்வாகச்சட்டத்தில் தற்றுணிபின் துஷ்பிரயோகம் மீதான கட்டுப்பாடுகளுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

(08 புள்ளிகள்)

7. 'பகிர்ந்தளிக்கப்பட்ட சட்டவாக்கங்கள் விலகுத்தன்மையையும் விருத்தியடையும் ஒழுங்குத் தேவைகளையும் சிக்கலானவற்றை தீர்ப்பதிலும் செயற்திறன் மிக்கவை என்ற போதும் இவை சனநாயக நெறிமுறைமை பொறுப்புடைமை மற்றும் அதிகார துஸ்பிரயோக சாத்தியப்பாடு என்பன தொடர்பில் கரிசனையை ஏற்படுத்துகிறது... அரசியலமைப்பாக்க விதிகளுடன் இவற்றின் சட்டவாண்தன்மை இணங்கி ஒழுகுதல் என்பனவற்றை உறுதிப்படுத்துமாறு நீதியியல் கட்டுப்பாட்டு முறைமைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.'

Shrivastava, Manas. "Introduction to Delegated Legislation and Its Judicial Control. " Issue 2 Int'l JL Mgmt. & Human. 7 (2024): 3018.

(அ) மேலுள்ள கூற்றின் அடிப்படையில் கையளிக்கப்பட்ட சட்டவாக்கம் என்பது சனநாயக கரிசனைகளுடன் எவ்வாறு தொடர்புடையது என்றும், அது எவ்வாறு வலுவேறாக்க விதியை குறைமதிப்பிடுகிறது என்றும் நுணுக்கமாக ஆராய்க.

(ஆ) கையளிக்கப்பட்ட சட்டவாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு நீதிமுறை கையாளும் முறைமைகள்ளை விளக்குக.

**(10x2=20 புள்ளிகள்)**

8. பின்வரும் ஏதேனும் **இரண்டின்** மீது சிறுகுறிப்பு எழுதுக.

(அ) நீதிமன்றங்களின் நியாயாதிக்கம் தொடர்பான நேரடியான மற்றும் மறைமுகமான விடுபாடு (Indirect and direct exclusion of jurisdiction of courts)

(ஆ) நிர்வாகச்சட்டத்தில் வெளிப்படுத்தல் கட்டளைகளின் அனுகூலங்கள் (Advantages of declaratory orders in Administrative Law)

(இ) உறுதி கேள் ஆணையின் பரப்பு (Scope of the writ of Certiorari)

(ஈ) முகத்தோற்றளவிலான பிழை (Error on the face of the record)

**(10x2=20 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமை பெற்றது -